# 11 இறை தரிசனம்

(உலகத்திலே பல மார்க்கங்கள் தோன்றியிருக்கின்றன. அவை அன்பையும், அகிம்சையையுமட, உலகின் நிலையாமையையும் கருப்பொருளாகக் கொண்டு மக்களை நன்னெறியின்பால் செலுத்திவந்தன.) அந்த வகையில் இந்து, பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம், சமணம் முதலானவை தமிழ் கூறு நல்லுலகில் நற்பண்புகளை வளர்ப்பதில் அரும்பாடுபட்டன. அவற்றின் போதனைகளை அறிந்து கொண்டு சமரசத்துடன் ஐக்கியமாய் வாழ்வது எமது கடமையாகும்.

இங்கு பெரும்பாலானோரால் பின்பற்றப்படும் சமயங்களை பிரதிநிதித்துவப் படுத்தத்தக்க ஐந்து பாடல்கள் தரப்பட்டுள்ளன. இப்பாடல்கள் அனைத்தும் தாம் சார்ந்து நிற்கும் கடவுளையோ, கடவுளின் தூதர்களையோ போற்றிப் புகழ்வதுடன், அவர்களை அடைந்து, அவர்களைத் தரிசிப்பதன் மூலம் பெறும் பேறுகள் பற்றியும் கூறுவதாக அமைகின்றன.

## திருவாசகம்

நாயன்மார்களுள் ஒருவராகிய மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய மணிவாசகமே திருவாசகம். இது ஊனினையுருக்கி உள்ளொளி பெருக்குவது. திருப்பெருந்துறையில் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட பின்பு அவர் பாடியருளிய திருச்சதகப் பாக்களுள் ஒன்றாகும்.

அப்பனேயெனக் கமுத னேயா
  னந்த னேயக நெகவள் □றுதே
னொப்ப னேயுனக் குரிய வன்பரி
  லுரியவனா யுனைப்பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை
  யாள னேதொழும் பாள ரெய்ப்பினில்
வைப்ப னேயெனை வைப்ப தோசொலாய்
  நைய வையகத் தெங்கண் மன்னனே

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| அகம்நெக | - | உள்ளம் இளகும் படி |
| அள்ஊறு | - | வாய் ஊறுவதற்கு ஏதுவாயுள்ள |
| வைப்பனே | - | உதவும் பொருளாக இருப்பவனே |
| பருக | - | அனுபவிக்க |
| நைய | - | வருந்தும்படி |
| துப்பனே | - | உணவாக உள்ளவனே |
| தொழும்பாளர் | - | தொண்டர்கள் |
| எய்ப்பினில் | - | இளைத்த காலத்தில் |
| வையகத்து | - | உலகத்தில் |

**பொழிப்புரை :-**

எனக்குத் தந்தையே, அமிர்தமே, ஆனந்தமே, உள்ளம் உருக வாய் ஊறுவதற்கு ஏதுவாயுள்ள தேன் போன்றவனே, உனக்கு உரிமை உடைய மெய்யன்பரைப் போல நானும் உரிமையாளனாகி உன்னைப் புசித்து உயிர் வாழ்வதற்கான ஒப்பற்ற உணவே! ஒளிவிளங்கும் திருமுடியை உடையவனே! மாறாத் துணையாய் இருப்பவனே, தொண்டர்க்குத் தளர்வுற்றிருக்குங்கால் உதவும் செல்வமே, இப்பொய்யுலக வாழ்க்கையில் நான் துன்புற்றிருக்கும்படி வைப்பது முறையாகுமோ? எங்கள் அரசே இயம்பாய்.

## கிரகித்தற் பயிற்சி

1 இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
2 இதனைப் பாடியவர் யார்?
3 இப்பாடலில் உங்களுக்குப் பிடித்த வரிகள் எவை? ஏன்?
4 இதனைப் பாடியவர் எதனை வேண்டுகின்றார்?
5 இப்பாடலில் கடவுள் எப்படியெல்லாம் அழைக்கப்படுகின்றார்?
6 திருவாசகத்தின் சிறப்பினைத் தொகுத்து சிறு கட்டுரையாக எழுதுக.
7 பின்வரும் பதங்களுக்கான ஒத்த சொல்லைப் பாடலில் இருந்து தருக.
   - ♦ உள்ளம் ♦ தொண்டர்கள்
   - ♦ வருந்துதல் ♦ உலகம்

8. பின்வரும் தொடர்களை சந்தி பிரித்தெழுதுக.
   - ¤ அப்பனேயெனக் கமுதனே
   - ¤ ஒப்ப னேயுனக் குரிய வன்பரில்
   - ¤ தொழும்பானரெய்ப்பினில் வைப்பனேயெனை வைப்பதோ

## முதுமொழிமாலை

(சீறாப்புராணமென்கின்ற காப்பியத்தை இயற்றிய உமறுப் புலவரின் பிறிதொரு நூல் முதுமொழிமாலை.) அல்லாஹ்வின் திருத்தூதரை - அருள்மறை நாயகரைக் காணவேண்டும் என்ற வேணவா எழுப்பிய இதய கீதமே முதுமொழி மாலை. அந்த மாலையில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு மணி இது.

விடுசுடர்ச் சோதி மயமெனும் வெட்ட
வெளியினிற் றோன்று மெய்ப்பொருளை
அடல்பெறச் சிறந்த வாயிர நாமத்
தண்ணலை யதிசெய வேந்தைச்
சுடர்மதிக் கோடி யெனவொளி திகழும்
ரூபரைச் சுவர்ணமே னியரைக்
கடையுக முடிவில் அனைத்தையுங் காக்கும்
முஹம்மதை என்றுகாண் குவனே!

### அரும்பதங்கள்

| | |
|---|---|
| விடுசுடர் | - சுடரை வெளிவிட்டுக் கொண்டிருக்கும் |
| வெட்ட வெளியினில் | - தானெனும் நிலைக்களன் அற்ற 'இன்மை' எனும் வெறுமையாகிய நிலையில்தோன்றும் தனிவெளி |
| அடல் பெறச் சிறந்த | - நாவால் உரைப்பதால் மனிதகுலம் வெற்றிபெறுவதற்குரிய சிறப்புடைய |
| அதிசெயவேந்தை | - மிகுந்த வெற்றியாளராகிய நபி (ஸல்) அவர்களை |
| சுடர்மதிக்கோடி | - சுடர் விட்டுப் பிரகாசிக்கும் கோடிக்கணக்கான முழுமதிகள் |
| சுவர்ணமேனி | - பொன்மேனி |
| கடையுகமுடிவில் | - ஆக்கப்பட்டவை யாவும் அழிக்கப்பட்டு முடிவாக அனைத்தும் எழுப்பப்படும் 'கியாமத்து' எனும் மறுமை நாளில் |

**பொழிப்புரை :-**

ஒளிமயமான தனிவெளியில் காணப்படும் உண்மைப்பொருளை மெய்யறிவுத் துறையில் வெற்றிபெற நாம் கூறத்தக்க ஆயிரமாயிரம் திருப்பெயர்களையுடைய அண்ணலை, அரும்பெரும் காரியங்களை ஆற்றக்கூடிய தலைவரை, கோடிக்கணக்கான முழுமதிகள் ஒன்று திரண்டு ஒளிவிடக் கூடிய பொன்னிற வடிவழகரை, இறுதித் தீர்ப்பு நாளில் தனது அடியார்கள் அனைவரையும் காக்கவல்ல முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களை எப்போது கண்டு களிக்கப் போகின்றேனோ!

## கிரகித்தற் பயிற்சி

1 இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

2 இதனைப் பாடியவர் யார்?

3 இந்நூலாசிரியர் இயற்றிய பிறிதொரு நூலின் பெயர் தருக.

4 இப்பாடலில் உங்கள் மனதைத் தொட்ட வரிகள் எவை? ஏன்?

5 இப்பாடலில் துதித்துப் போற்றப்படுபவர் எவ்வாறெல்லாம் விளிக்கப்படுகின்றார்?

6 'சுடர்மதிக் கோடியென ஒளி திகழும் ரூபர்' இவ்வடியின் சிறப்பினை விளக்குக.

7 இறை தூதரைக் காணாத, காண விழைகின்ற புலவரின் ஏக்கம் எவ்வரிகள் மூலம் எடுத்துக் காட்டப்படுகின்றது?

8 நபிகள் (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பு இப்பாடலூடாக எவ்வாறு புலப்படுகின்றது?

9 பின்வரும் பதங்களுக்கான ஒத்த பதங்களைப் பாடலில் இருந்து தெரிக

- வெற்றி
- திங்கள்
- ஒளி

11 பிரித்தெழுதுக

- வெளியிற்றோன்று
- நாமத்தண்ணல்

## இரட்சணிய யாத்திரிகம்

இப்பாடல் இரட்சணிய யாத்திரிகம் எனும் நூலின்கண் உள்ளது. இதன் ஆசிரியர் கெ. அ. கிருஸ்ணபிள்ளை ஆவார். ஜோன் பன்யன் என்பவர் எழுதிய மோட்சப் பிரயாணம் என்னும் நூலையும் புதிய ஏற்பாடு என்னும் வேத நூலையும் முதனூலாகக் கொண்டு இரட்சணிய யாத்திரிகம் என்னும் காவியத்தை ஆக்கினார். இலக்கியச் சுவையும் பக்திச் சுவையும் ஒருங்கே அமையப் பெற்ற கிறிஸ்தவ இலக்கியத்திலிருந்து ஈண்டு ஒரு பாடலை நயப்போம்.

கள்ளமுறுங் கடையேனுங் கடைத்தேறப் பெருங்கருணை
வெள்ளமுகந் தருள்பொழியும் விமலலோ சனநிதியை
உள்ளமுவப் புறுதேனை உயிர்க்குயிரை உலவாத
தெள்ளமுதைத் தீங்கனியைச் சிலுவைமிசைக் கண்டேனே.

### அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| உகந்து | - | விரும்பி |
| விம லோசன நிதி | - | குற்றமற்ற கண்களைக் கொண்ட செல்வம் |
| கடைத்தேறல் | - | ஈடேற்றம் |
| உலவாத | - | குறைவுபடாத |

### பொழிப்புரை :-

தீய எண்ணங்களையுடைய கீழோனான நானும் மீட்சிபெறப் பெரிய கருணையாகிய வெள்ளத்தை விரும்பி அருளாகப் பொழியும் அழகிய கண்களைக் கொண்ட செல்வத்தை, உள்ளத்தை மகிழ்விக்கின்ற தேனை, உயிருக்கு உயிராக அமைபவரை, எடுக்க எடுக்க குறைவுபடாத இனிய அமுதத்தை இனிய கனியை சிலுவையில் கண்டேனே!

### பயிற்சி

1 இப்பாடல் இடம்பெற்ற நூல் யாது?
2 இதனை இயற்றியவர் யார்?
3 இரட்சணிய யாத்திரிகம் எனும் காப்பியத்திற்கு முதல் நூல் எது?
4 இந்நூல் எச்சமயத்தைச் சார்ந்தது?
5 இப்பாடலில் உங்களைக் கவர்ந்த வரி யாது? காரணம் தருக.
6 இப்பாடலில் இடம்பெற்ற அணிகளை விளக்குக.
7 வெள்ளமுகந் தருள் பொழியும் விமலலோ சனநிதியை - சந்தி பிரித்து எழுதுக.

8 பின்வரும் கருத்துகளுக்குப் பொருத்தமான சொற்களை இப்பாடற் பகுதியில் இருந்து தெரிவு செய்க.

- ⌑ மனம் ⌑ விரும்புதல்

9 பிரித்தெழுதுக

- ⌑ கள்ளமுறுங் ⌑ உள்ளமுவப் புறுதேனை
- ⌑ தெள்ளமுதை ⌑ பெருங்கருணை

## மணிமேகலை

(புத்தபிரானைப் போற்றும் இப்பகுதி மணிமேகலை என்னும் காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது.) புத்த சமயக் காப்பியமான இதனை மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் ஆக்கினார். மணிமேகலா தெய்வம் புத்தபிரானைப் போற்றிய பகுதியே இங்கு தரப்பட்டுள்ளது.

புலவன் தீர்த்தன் புண்ணியன் புராணன்
உலக நோன்பி னுயர்ந்தோ யென்கோ
குற்றங் கெடுத்தோய் செற்றஞ் செறுத்தோய்
முற்ற வுணர்ந்த முதல்வா வென்கோ
காமற் கடந்தோய் ஏம மாயோய்
தீநெறிக் கடும்பகை கடிந்தோ யென்கோ
ஆயிர வாரத் தாழியந் திருந்தடி
நாவா யிரமிலேன் ஏத்துவ தெவனோ

### அரும்பதங்கள்

தீர்த்தன் - தூயன்
குற்றம் - காம, வெகுளி, மயக்கம் முதலாய குற்றங்கள்
புராணன் - மிகப் பழமையானவன்
செற்றம் செறுத்தோய் - சினம் தவிர்த்தோய்
ஏமம் - பாதுகாவல்
ஆரம் - சக்கரக்கால்
கடிந்தோன் - துறந்தோன்

ஆழியந் திருந்தடி - சக்கர ரேகையுள்ள திருவடி
(புத்தபிரான் பாதத்தில் சகஸ்ரார சக்கர ரேகையுண்டு என்பர். இந்தரேகை அமையப் பெற்றோர் பெரும்புகழ் பெற்றவராகவும், புனிதராகவும், போற்று வதற்குரியவராகவும் விளங்குவர் என்பர்)



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

**பொழிப்புரை :-**

மெய்யறிவினை உடையோனே! தூய்மையானவனே! புண்ணியனே! பழமையினை உடையவனே! உலக நோன்பாகிய ஒழுக்கத்தினாலே உயர்வு பெற்றோனே! என்று கூறி நின்னைப் போற்றுவேனோ! குற்றங்களைப் போக்கியவனே! சினத்தை முற்றவும் கடிந்தோனே! காமனை வென்றவனே! இன்பமாக விளங்குபவனே! தீயொழுக்கமாகிய வாழ்வின் கடும்பகைகளைக் கடிந்து ஒதுக்கியவனே! என்றெல்லாம் உன்னைப் போற்றுவேனா, பெருமானே! ஆயிரம் ஆரத்தியுடைய தர்மச் சக்கரத்தினைப் பொருந்திய நின் செவ்வையான பாதங்களை நாவாயிரம் இல்லாதேன் எங்ஙனம் போற்றித் துதிப்பேன்.

## கிரகித்தற் பயிற்சி

1 இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?
2 இதனைப் பாடியவர் யார்?
3 எச்சந்தர்ப்பத்தில் பாடப்பட்டது?
4 இந்நூல் எச்சமயத்தைச் சார்ந்தது?
5 புத்தபிரானைத் துதித்துப் போற்றும் வேறு இலக்கியங்கள் தருக.
6 ‘‘நாவாயிரமிலேன் ஏத்துவதெவனோ’’, இவ்வடியின் சிறப்பினை விளக்குக.
7 என்கோ என்ற பதத்தின் தற்கால வழக்கை எழுதுக.
8 ‘‘தீநெறிக் கடும்பகை’’ விளக்குக.
9 ‘‘ஆயிர வாரத் தாழியந் திருந்தடி’’, என்பதனை சந்தி பிரித்தெழுதுக.

10. பின்வரும் கருத்துகளுக்குப் பொருத்தமான சொற்களை இப்பாடற் பகுதியில் இருந்து தெரிவு செய்க.
    - தூய்மையானவன்
    - மிகப்பழமையானவன்
    - அறிஞன்

11. பிரித்தெழுதுக
    - நோன்பினுயர்ந்தோய்
    - காமற் கடந்தோய்
    - ஏமமாயோய்

## நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

ஆழ்வார்கள் பதின்மருக்குள்ளே மிகக் குறைந்த அளவு (பத்து) பாசுரம் பாடி ஏற்றம் பெற்றவர் திருப்பாணாழ்வார். அவரருளிய முதலாவது பாசுரம் இதுவாகும்.

அமல னாதிபிரா னடியார்க் கென்னை யாட்படுத்த
விமலன் விண்ணவர் கோன்விரை யார்பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதி லரங்கத் தம்மான்திருக்
கமல பாதம் வந்தென் கண்ணி னுள்ளன வொக்கின்றதே

### அரும்பதங்கள்

| | |
|---|---|
| விரையார் பொழில் | - நறுமணமிக்க சோலை |
| நீள்மதில் | - உயர்ந்த மதில்கள் |
| அரங்கம் | - திருவரங்கம் என்னும் கோயில் |

### பொழிப்புரை

பரிசுத்தனாய், உலகுக்கெலாம் முதல்வனாய், தனது தொண்டர்க் கென்னை அடிமைப்படுத்த வந்த பேரொளியை உடையவன், விண்ணவர்க்கெல்லாம் தலைவன், நறுமணம் மிகுந்த சோலையுடைய வேங்கட மலையின் கண் அமர்ந்தவனாய் ஒளிமிக்கவனாய், பேரொளி உடையவனாய், பரமபதத்திலே உள்ளவனாய், உயர்ந்த மதில்களையுடைய கோயிலில் உறைகின்ற அம்மானின் போற்றற்கரிய செந்தாமரை போன்ற திருவடிகள் வந்து எனது கண்களில் ஏலவே உள்ளதை ஒத்துள்ளன.

### கிரகித்தற் பயிற்சி

1. ஆழ்வார்கள் எனப்படுவோர் யாவர்?
2. உங்களுக்குத் தெரிந்த ஆழ்வார்கள் மூவரின் பெயர்களைத் தருக.
3. திருப்பாணாழ்வார் திருமால் மீது கொண்ட அதீத அன்பை இப்பாடலின் எப்பகுதி சிறப்பாகப் புலப்படுத்துகின்றது?விளக்குக.
4. ‘கமலபாதம்’ இத்தொடரை விரித்து எழுதுக.

5 இதனை உருவகமாக்கி எழுதுக.

6 இறைவனின் திருவுருவைக் கண்டதும் ஆழ்வார் கொண்ட ஆனந்தம் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

7 திருமாலின் திருமேனி அழகைத் துதித்துப் போற்றும் மூன்று வெவ்வேறு பாடல்களைத் தேடித் தொகுக்குக.

8. பின்வரும் பதங்களுக்கான ஒத்த சொல்லைப் பாடலில் இருந்து தருக.

- ¤ சோலை
- ¤ தொடக்கம்
- ¤ வாசனை
- ¤ தாமரை

9 பிரித்தெழுதுக

- ¤ அமலனாதிபிரான்
- ¤ நீள்மதி லரங்கத் தம்மான்

## செயற்பாடு

**குழுவாக இணைந்து பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.**

- ''இறை தரிசனம்'' எனும் பகுதியில் தரப்பட்ட பாடல்களை நன்கு கிரகித்துப் பின் அவற்றில் காணப்படும் பொதுவான கருத்துக்களை தொகுத்து எழுதுக.
- குழுக்களாக இணைந்து பல்வேறு சமயக் கருத்துக்களைக் கூறும் பாடல்களைத் தொகுத்து எழுதுக. அவற்றில் காணப்படும் ஒற்றுமைத் தன்மைகளையும் விளக்குக.

## இலக்கணம்

### வினைச்சொல் II

1. உமறுப்புலவர் முதுமொழிமாலையை **இயற்றினார்.**
2. மாணிக்கவாசக சுவாமிகள் நெடுந்தூரம் **நடந்தார்.**

♦ தடித்த எழுத்திலுள்ள வினைச்சொற்களை அவதானியுங்கள்.

♦ ''இயற்றினார் என்ற வினைச்சொல் (பயனிலை) செயப்படுபொருளை ஏற்கின்றது. (எதை? என்று வினவும் பொழுது ''**முதுமொழிமாலையை**'' என்ற விடை கிடைக்கின்றது.)

♦ இத்தகைய வினைகள் **செயப்படுபொருள் குன்றா** வினைகள் எனப்படும்

.

- **'நடந்தார்'** என்ற வினைச்சொல் (பயனிலை) செயப்படுபொருளை ஏற்கவில்லை. (எதை? என்று வினவும் பொழுது விடை இல்லை)

  இத்தகைய வினை **செயப்படுபொருள் குன்றிய வினைகள்** எனப்படும்.

**சில உதாரணங்களைப் பாருங்கள்.**

1. செயப்படுபொருள் குன்றாவினை உ + ம் :- படித்தான், பாடினான், கட்டினான், எழுதினான், பார்த்தான்.
2. செயப்படுபொருள் குன்றிய வினை உ + ம் :- நடந்தாள், சிரித்தாள், அழுதது, விழுந்தார், எழுந்தான்.

செயப்படுபொருள் ஏற்கும் வினைகள் **செயப்படுபொருள்குன்றாவினை** எனப்படும். செயப்படுபொருள் ஏற்காத வினைகள் **செயப்படுபொருள் குன்றியவினை** எனப்படும்.

## பயிற்சி

**I** கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் செயப்படுபொருள் குன்றிய வாக்கியங்களையும் செயப்படுபொருள் குன்றாத வாக்கியங்களையும் வேறுபடுத்தி எழுதுங்கள்

1. மணிமேகலா தெய்வம் புத்தபிரானைப் போற்றியது.
2. திருப்பாணாழ்வார் திருமாலைப் போற்றிப் பாசுரங்கள் பாடினார்.
3. உமறுப்புலவர் காவியத்தை இயற்றி முடித்ததும் மகிழ்ந்தார்.
4. கிருஸ்ணபிள்ளை இரட்சணிய யாத்திரிகம் எனும் காவியத்தை ஆக்கினார்.
5. மணிமேகலா தெய்வம் வான்வழியே பறந்து சென்றது.
6. திருப்பாணாழ்வார் திருமாலின் திருவுருவம் கண்டு நெகிழ்ந்தார்.

**II** கீழ் உள்ள ஒவ்வொன்றுக்கும் ஐவைந்து உதாரணங்கள் முழுமையான வாக்கிய வடிவில் தருக. குறிப்பிட்ட அச்சொல்லின் கீழ் கோடிடுக

- ⌑ பெயரெச்சம்
- ⌑ வினையெச்சம்
- ⌑ செயப்படுபொருள் குன்றாவினை
- ⌑ செயப்படுபொருள் குன்றிய வினை

**III** நீங்கள் இதுவரை கற்றுள்ள வினைச்சொல் பகுதிக்கான சிறிய எண்ணக்கரு வரைபடங்களைக் குழுரீதியாகத் தயாரித்துக் காட்சிப்படுத்துங்கள்.

## ஆக்கத்திறன்

### அறிக்கை

- குறித்தவொரு விடயம் தொடர்பான தகவல்களை திரட்டி ஒழுங்குபடுத்தி முன்வைத்தலே அறிக்கை ஆகும்.
- நடைமுறைத் தேவைகளுக்காக எழுதும் முயற்சிகளுள் அறிக்கை எழுதுவதும் ஒன்றாகும்.
- அறிக்கை எழுதுவதற்குரிய பல சந்தர்ப்பங்கள் ஒருவருடைய வாழ்வில் ஏற்படக்கூடும்.
    - கூட்டங்களுக்கான அறிக்கை எழுதுதல்
    - ஆய்வு அறிக்கை
    - சுற்றுலா, சிரமதானம் போன்ற நிகழ்வுகளுக்கான அறிக்கை
    - பாடசாலைகள் போன்றவைகளின் வருடாந்த அறிக்கைகள்
    - அரசாங்க, தனியார் நிறுவனங்களின் அலுவலகம் சார்ந்த அறிக்கைகள்

### அறிக்கையொன்றின் பண்புகள்

- ஒழுங்குபடுத்திக் கூறல்
- உள்ளதை உள்ளவாறு கூறல்
- சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறல்
- எளிமையாகக் கூறல்

### அறிக்கை எழுதும் படிமுறைகள்

- தகவல்களைத் திரட்டுதல் - குறிப்பெடுத்தல் - தகவல் மூலங்களைக் குறித்தல்
- குறிப்புக்களை ஒழுங்குபடுத்தல் - தொகுதிகளாக்குதல்
- சட்டகம் அமைத்தல்
- அறிக்கையின் முதல் வரைபை எழுதுதல்
    - அறிக்கை எது பற்றியது என்பதைக் கூறும் முன்னுரை
    - பிரதான விடயங்களுக்கு தனித்தனியாக பந்திகள்
    - பிரதான விடயங்களை தொகுத்து/ தீர்ப்பை வெளியிட்டு அமைகின்ற முடிவுரை

- சில வகையான அறிக்கைகளுக்கு விதப்புரைகள் எழுத வேண்டி இருக்கும். அவ்வாறானவற்றிற்கு ‘‘ விதப்புரைகள் ’’ என உபதலைப்பிட்டு விதப்புரைகளைச் சுருக்கமாக எழுதுதல்.
- முதல் வரைபை வாசித்து, தேவையான திருத்தங்களைச் செய்க. தேவையாயின் மறுபடி எழுதுதல்.
- தேவைக்கேற்ப ஆதாரங்கள், உசாத்துணை நூற்பட்டியல், என்பவற்றை இணைத்தல்.
- அறிக்கை எழுதும் போது பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு எழுதுதல்.
    - தலையங்கம்.
    - இன்னாருக்கு சமரப்பிக்கப்படுகின்றது என்பது, (சமர்ப்பணம், விளிப்பு)
    - எழுதுபவரின் ஒப்பம், பதவி, எழுதப்பட்ட இடம், திகதி, முதலியன.

## பயிற்சி

1 நான்கு குழுக்களாகி கீழே கூறப்பட்டுள்ள அறிக்கைகளைத் தயாரியுங்கள்.

2 மாலைக்காட்சி பற்றிய பல்வேறு புலவர்கள் பாடிய விடயங்களைத் தொகுத்துத் தயாரிக்கும் அறிக்கை.

3 விஞ்ஞான கூடத்தில் நீங்கள் மேற்கொண்ட பரிசோதனை - செயற்பாடு பற்றிய அறிக்கை.

4 உங்கள் பாடசாலையின் தமிழ் இலக்கிய மன்றம் நடத்திய கலை விழா பற்றிய அறிக்கை.

5 கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்வது தொடர்பான முன்னறிக்கை.